**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) | |
| | : | Prosecution - | **PW-8** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : டேவிட்ஜோசப்பால்ராஜ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 03rd day of January 2024.

(எதிரி பிரேம்குமார் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் பாரதி ஏர்டெல் லிமிடெட் நிறுவனத்தில் நோடல் அதிகாரியாக பணிபுரிந்துவந்து, ஓய்வுபெற்று, தற்போது சென்னையில் வசிக்கிறேன். கடந்த 21.12.2020 அன்று கரூர் நகர உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளரிடமிருந்து, எனக்கு ஒரு விண்ணப்பம் வந்தது. அதில் பாரதி ஏர்டெல் நிறுவனத்தின் மொபைல் எண். 9384246805 என்ற எண்ணிற்குரிய வாடிக்கையாளர் விண்ணப்ப படிவம் மற்றும் 17.09.2020 முதல் 18.09.2020 வரையிலான உள் மற்றும் வெளி அழைப்பு விவர அறிக்கை கேட்டு, தபால் மூலமாக விண்ணப்பம் வந்தது. மேற்சொன்ன ஆவணங்களான வாடிக்கையாளர் விண்ணப்ப படிவம், உள் வெளி அழைப்பு விவர அறிக்கையை 65 பி சான்றிதழுடன் 24.12.2020 அன்று நான் அனுப்பி வைத்தேன்.

மேற்சொன்ன அழைப்பு விவர அறிக்கை மற்றும் வாடிக்கையாளர் விண்ணப்ப படிவத்தை வழங்குவதற்கு எனக்கு அதிகாரம் உள்ளது. செல்போன் எண். 9384246805 என்ற மொபைல் எண் கவிதா, க/பெ. சின்னமுருகன், 168, வடக்குத்தெரு, தாந்தோணிமலை, கரூர் என்ற வாடிக்கையாளரின் விண்ணப்பத்தின்

பேரில் வழங்கப்பட்டுள்ளது. அவர் விண்ணப்ப படிவத்துடன், அவரது ஆதார் அடையாள அட்டையை இணைத்து வழங்கியுள்ளார்.

9943440887 என்ற எண்ணிலிருந்து 9384246805 என்ற எண்ணிற்கு 17.09.2020 அன்று காலை 7.37 மணிக்கு ஒரு உள் அழைப்பு வந்துள்ளது. மீண்டும் 9943440887 என்ற எண்ணிலிருந்து 9384246805 என்ற எண்ணிற்கு 17.09.2020 அன்று இரவு 7.23 மணிக்கு ஒரு உள் அழைப்பு வந்துள்ளது. பின்னர், 9384246805 என்ற எண்ணிலிருந்து 9943440887 என்ற எண்ணிற்கு 18.09.2020 அன்று காலை 9.11 மணிக்கு ஒரு வெளி அழைப்பு சென்றுள்ளது.

மேற்சொன்ன 9384246805 செல்போன் எண் சம்மந்தமாக கரூர் காவல்துணை கண்காணிப்பாளர் எனக்கு அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.16. மேற்சொன்ன கடிதத்திற்கு எங்கள் அலுவலகத்திலிருந்து எனது உதவியாளர் ஜெயக்குமார் அனுப்பிய கடிதம் *(அவருடைய கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம்)* அ.சா.ஆ.17. *மேற்சொன்ன கடிதத்தை அ.சா.8 கையெழுத்திட்டு அனுப்பவில்லை என்பதால் மேற்சொன்ன ஆவணம் குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்சொன்ன கடிதத்தில் கையெழுத்திட்டவரின் கையெழுத்து சாட்சிக்கு பரிட்சயமானவர் என்பதால் மேற்சொன்ன ஆட்சேபனை மறுக்கப்பட்டது.*

மேற்சொன்ன வாடிக்கையார் எங்கள் அலுவலகத்தில் கொடுத்த விண்ணப்ப நகல். அதனுடன் வாடிக்கையாளர் இணைத்து வழங்கிய ஆதார் அடையாள அட்டை நகலுடன் சேர்த்து அ.சா.ஆ.18. மேற்சொன்ன எண்ணிற்குரிய அழைப்பு விவர அறிக்கை அ.சா.ஆ.19.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பாரதி ஏர்டெல் நிறுவனத்தின் நெட்வொர்க் இந்தியா முழுவதும் உள்ளது. நான் தமிழ்நாடு மாநிலத்தின் நோடல் அதிகாரி. இந்தியா முழுவதற்கும் ஒரு தலைமை நோடல் அதிகாரி உள்ளார். அழைப்பு விவர குறிப்புகள், . . . . . . . .

வாடிக்கையாளரின் பில் வகைக்காக மட்டும் பராமரிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. வாடிக்கையாளரின் பில்லுக்காகவும், சட்டத்தை நிறைவேற்றும் அமைப்பிற்காகவும் பராமரிக்கப்படுகிறது. எங்கள் நிறுவனத்தின் மாஸ்டர் கம்ப்யூட்டர் டெல்லியில் உள்ளது. மாஸ்டர் கம்ப்யூட்டரை நிர்வகிப்பதற்கு ஒரு பொறியாளர் உள்ளார். அழைப்பு விவர அறிக்கைகளை பெறுவதற்கு நான் அந்த பொறியாளருக்கு தகவல் கொடுப்பேன் என்றால் சரியல்ல. என் பராமரிப்பில் உள்ள கணிணியிலிருந்து அழைப்பு விவர அறிக்கைகளை பெறுவதற்கு எனக்கு வசதியும் வழியும் (Access) உள்ளது. அ.சா.ஆ.17 முதல் 19 ஆவணங்களை வழங்குவதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.17 கடிதத்தை எனது உதவியாளர் ஜெயக்குமார் அளித்த என்ற விவரத்தை நான் போலீசாரிடம் சொன்னேனா என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.17 முதல் 19 ஆவணங்களை போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) | |
| | : | Prosecution - | **PW-9** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரசாந்த் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 03rd day of January 2024.

**(எதிரி பிரேம்குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் ஊர்காவல்படையில் பணிபுரிகிறேன். கரூர் பகுதியில் உள்ள காவல்துறை சார்பில் வைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களை பராமரித்து வருகிறேன். இவ்வழகது சம்பவ இடத்தை புகைப்படம் எடுக்குமாறு ஆய்வாளர் உதயக்குமார் கேட்டுக்கொண்டதின்பேரில், கடந்த 18.09.2020 அன்று பகல் சுமார் 11.00 மணியளவில் நான் சென்று புகைப்படம் எடுத்து, பிரிண்ட் எடுத்து, ஆய்வாளர் உதயக்குமாரிடம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 2014ம் வருடத்திலிருந்து தற்போது வரை ஊர்க்காவல்படையில் பணிபுரிகிறேன். நான் தனியாக கரூர், லெட்சுமிராம் தியேட்டர் அருகில் செருப்புக்கடை வைத்துள்ளேன். என் அப்பா ஒரு கடையை பார்த்து வருகிறார். நான் ஒரு கடையை பார்த்து வருகிறேன். என் அப்பா காலத்திலிருந்து செருப்புக்கடை வைத்துள்ளோம். நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றும், நான் சொன்னபடி சம்பவ இடத்திற்கு சென்று புகைப்படம் எடுக்கவில்லை என்றும்

சொன்னால் சரியல்ல. நான் ஊர்க்காவல்படையில் பணிபுரிவதாலும், என் வியாபாரத்திற்கு போலீசார் உதவி வேண்டும் என்பதாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) | |
| | : | Prosecution - | **PW-10** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : பெரியசாமி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 03rd day of January 2024.

**(எதிரி பிரேம்குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரவக்குறிச்சி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 18.09.2020 அன்று கரூர் நகர காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, அன்றைய தினம் 11.00 மணிக்கு அப்பல்லோ மருத்துவமனையிலிருந்து எனக்கு கிடைத்த தகவலின்பேரில், நான் அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்று, அங்கிருந்த வாதி சஸ்மிதா என்பவரிடம் புகாரை பெற்று, கரூர் நகர கா.நி.கு.எண். 1031/2020, ச/பி. 302 இதச படி வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.20. பின்னர் புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவருக்கு அனுப்பியும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், அதன் ஒரு நகலை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கரூர் நகர காவல்நிலையத்திலிருந்து அப்பல்லோ மருத்துவமனை சுமார் 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. கரூர் நகர காவல்நிலையத்திலிருந்து கரூர் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம் 6 கி.மீ. தூரத்தில் உள்ளது. கிருஷ்ணமூர்த்தி என்பவர் இறந்த விவரம் தெரிந்துதான் நான் அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்றேன். நான் அப்பல்லோ மருத்துவமனையில் பணி மருத்துவரை விசாரித்தேன். விபத்து பதிவேட்டு நகலை யார் பதிவு செய்தார் என்பதை தெரிந்துக்கொண்டேன். கிருஷ்ணமூர்த்தி என்பவரை யார் மருத்துவமனையில் அனுமதித்தனர் என்பதையும் தெரிந்துக்கொண்டேன். அந்த நபரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் ஆய்வாளர்தான் அவரது வாக்குமூலத்தை பதிவு செய்திருப்பார். கிருஷ்ணமூர்த்தி என்பவரை யார் மருத்துவமனையில் அனுமதித்தார் என்றால் கிருஷ்ணமூர்த்தியின் மனைவி சஸ்மிதா என்பவர் அனுமதித்தார். விபத்து பதிவேட்டு நகலில் திலகா ஆம்புலன்ஸ் மூலம் சஸ்மிதா என்பவர் அனுமதித்தார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. விபத்து பதிவேட்டு நகலில் தினேஷ்குமார் என்பவர் அனுமதித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், சுஸ்மிதா என்பவர் மருத்துவமனையில் அனுமதித்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் தினேஷ்குமார் என்பவரும் சஸ்மிதா என்பவருடன் வந்தார். மருத்துவமனையில் விபத்து பதிவேட்டு நகலை பார்த்து, அதில் தினேஷ்குமார் மருத்துவமனையில் அனுமதித்தார் என்பது தெரிந்து, தினேஷ்குமார் என்பவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. சுஸ்மிதாவை நான் மருத்துவமனையில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. தினேஷ்குமார் என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலம்தான் முதல்புகார் என்றும், அது வழக்கில் மறைக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. புகார் மனு காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்காக பின்னிட்டு, இறந்துபோனவரின் உறவினர் மற்றும் மேல் அதிகாரியின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. புகார் மனுவில் துரைப்பாண்டி சம்பவத்தில் ஈடுபட்டார் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிரி மணிகண்டன், எதிரி பிரேம்குமார்

ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்தனர் என புகாரில் கூறப்படவில்லை என்றால் சரிதான். புகாரில், எதிரிகள் இருசக்கர மோட்டார் வாகனத்தில் தப்பிச்சென்றனர் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார் பொய்யாக தயாரிக்கப்பட்டுள்ளதால் அரசு வழக்கிற்கு முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.